
தாயுமானவரின் அத்வைதமும்
வேதாத்திரி மகரிசி அத்வைதமும்


மன்னார்குடி பானுகுமார்.

---

# தாயுமானவரின் அத்வைதமும்

# வேதாத்திரி மகரிசி அத்வைதமும்

**அத்வைதம்** என்பது சமஸ்கிருத சொல்லாகும்.( இரண்டற்ற நிலை என்று பொருள் தருகிறது.

இது இந்து தத்துவத்தில் இறைவனின் தன்மை பற்றிய ஒரு கொள்கை ஆகும்.



சீவன் (ஜீவாத்மா) என்பதும் இறைவன் (பிரம்மம்|பரமாத்மா) என்பதும் ஒன்றுதான்; வேறல்ல என்றும் சகல உயிரினங்களுக்குள்ளும் துவாக ஆத்மாவாக விளங்குகின்றது என்றும் இத்தத்துவம் கூறுகிறது.

கி.பி. 788-820ம் காலத்தே வாழ்ந்த ஆதிசங்கரர் (இவரது காலம் கி.மு மூன்றாம் நூற்றாண்டு எனவும் ஒரு வாதம் இருக்கின்றது) முதன்முதலில் அத்வைத தத்துவத்தைத் தொகுத்து எழுதி வைத்தார். இவர் யாருக்கும் உபதேசிக்கவோ பிரசாரம் செய்யவோ இல்லை.

இவர் கேரளத்திலுள்ள (அன்றைய சேர நாடு) காலடி எனுமிடத்தில் சிவகுரு - ஆரியாம்பாள் தம்பதிகளுக்கு மகனாக அவதரித்தார்.



சங்கரரின் குருவின் பரமகுருவாகிய கௌடபாதர் எழுதிய மாண்டூக்ய காரிகை பிரம்மசூத்திரத்தினை விளக்க எழுந்தது.

இதில் கூறப்பட்ட விளக்கங்கள் போதிய தெளிவுடன் காணப்படாமையால். அதனை மேலும் இலகுபடுத்தி

விளக்கும் பொருட்டு எழுந்ததுவே சங்கரரின் அத்வைத சிந்தனையாகும்.

**துவைதம்** த்வி என்றால் இரண்டு. இறைவன் ஒருவனே சுதந்திரமானவன், உலகு உயிர் ( பரதந்திரமானவை ) வேறானவை.



இறைவன் தனி, மற்றவை அதில் சேராதவை, பரமாத்மா, ஜீவாத்மா, ஜட உலகம்-இவை எவராலும் உண்டாக்கப்படாத நித்தியப் பொருள்கள்.

உலகம் ஒரு தோற்றம் அன்று. சுதந்திரம் இறைவனுக்கு மட்டும் உண்டு. கர்மத்தை நீக்கினால் வீடுபேற்றை அடையலாம். துவைத தத்துவத்தை தோற்றுவித்தவர் மத்வர் ஆவார்.

**விசிட்டாத்துவைதம்** (விசிஷ்டாத்வைதம்) என்பது காலத்தால் பழமைவாய்ந்து, பின்னர் வந்த வைணவ மகாச்சாரியராகிய இராமானுசரால் புகழ்பெற்ற தத்துவம் ஆகும்.



சிறப்புநிலையான அத்வைதம் (இரண்டன்மைக் கொள்கை) என்பது இதன் பொருள் (விசிஷ்ட (சிறப்பு) + அத்வைதம் (இரண்டன்மை) = விசிஷ்டாத்வைதம்= விசிட்டாத்துவைதம்).

பிரம்ம சூத்திரம், பகவத் கீதை முதலியவற்றிற்கு தமது விசிட்டாத்துவைதக் கொள்கைப்படி உரை எழுதினார்.

- இறைவன் நம்மோடு இருக்கிறார் என்பது அத்துவைதம் (துவைதம் அற்ற நிலை), (இரண்டற்ற ஒருமை நிலை)

- நமக்கு முன்னும் நமக்குப் பின்னும் இறைவன் இருப்பதால் இறைவன் வேறு, நாம் வேறு, மழை நமக்குள், நம்மால் இயங்குவது இல்லை, - என எண்ணி இறைவனையும், நம்மையும் இரண்டாகப் பார்ப்பது துவைதம்.
- இந்த இரண்டு கோட்பாடுகளையும் ஒப்புக்கொள்வது விசிட்டாத்துவைதம். (செவ்விருமை)

## எளிமையாகச் சொன்னால்..................................

- நமக்கு முன் உணவு (துவைதம்)
- வயிற்றுக்குள் உணவு (விசிட்டாத்துவைதம்)
- உணவு நம் உடலில் சத்தாக மாறிய நிலை (அத்துவைதம்)

விசிட்டாத்துவைதமானது சீவாத்மாவும் பரமாத்மாவும் ஒரே பொருளாலானவை என்றும் சீவாத்மா பரமாத்மாவிலிருந்து வெளிப்பட்டது என்றும் கூறுகிறது.

சித்து, அசித்துச் சேர்க்கையால் விளங்கும் இரண்டற்றதான பிரம்மம் உண்டென்பதே உட்கருத்து.

பிரம்மம் ஒருவரே. அவர் சத்து என்றும் பிரம்மம் என்றும் ஈசுவரன் என்றும் திருமால் என்றும் பெயர் பெறுகிறார்.

அவர் சித்து என்னும் ஆத்மாவுடனும் அசித்து எனப்படும் சடத்தோடும் எப்போதும் சேர்ந்திருக்கிறார்.

பரமாத்மாவே நிலையானவர். சுதந்திரம் உடையவர் சித்தும் அசித்தும் அவரைச் சார்ந்திருப்பவை.

ஆசாரிய அன்பு, சுருதி, சுமிருதி, நம்பிக்கை, மோட்ச விருப்பம், உலக ஆசை அறுதல், தரும் சிந்தனை, வேத பாராயணம், சாது சங்கமச் சேர்க்கை முதலானவற்றால் கர்மபந்தத்தை விட்டு முக்தி பெறலாம்.

## தாயுமானவரின் அத்வைத இயல்பு.

இறைவன். உலகத்தோடு இரண்டறக் கலந்து நிற்கின்றான் என்பதை> கடவுள் அத்துவிதமாயிருக்கின்றார் என்று வேதங்கள் சொல்லியிருக்கின்றன.

---

இருப்பினும் ஏகம் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல், அத்துவிதம் என்ற சொல்லை மறைகள் வழங்கியது.

கடவுளும் உலகமும் பொருட் தன்மையால் வேறாக இருக்கிறது, கலப்பால் வேற்றுமை தோன்றாவாறு கடவுள் உலகத்தோடு கலந்திருக்கின்றார்.

அத்துவித பாவனை செய்வதே ஞான நெறியாதலின்- அவ்வாறின்றிக் கடவுளும் உலகமும் வேறல்ல எனக்கருதி-- ஏகான்ம வாதங்கோடல் தவறாகுமாதலின், அத்துவிதம் என்ற சொல்லின் பொருள் தெரிந்து சிவத்தோட அத்துவித பாவனை செய்ய வேண்டும் என்றார் தாயுமானவர்.

"அத்வைதம் என்ற அந்நியச்சொல் கண்டு உணர்ந்து

சுத்த சுத்த சிவத்தைத் தொடருநாள் எந்நாளோ?" (எந்நாட்கண்ணி நிலைபிரிந்தோர்.4)

"ஒன்றுஇரண்டும் இல்லதுவாய் ஒன்றுஇரண்டும் உள்ளதுவாய்

நின்ற சமத்துநிலை நேர்பெறுவது எந்நாளோ?" (எந்நாட்கண்ணி நிற்கும் நிலை 15)

நாம் பிரமம் என்று பாவனை செய்தால் நாமென்ற உணர்ச்சி ஆங்காரத்தை உண்டாக்கும் ஆதலால் அப்பாவனையை மறுப்பார் தாயுமானவர்,

"நாதபிரமம் என்றால் நடுவேஒன்று உண்டாமால்

தேம்பி எல்லாம்ஒன்றாய்த் திகழுநாள் எந்நாளோ?"

என்றார்.

சிவத்தோடு இரண்டற்ற நிலையில் நிற்பார்க்குச் சிவத்தைக் காண்கின்ற தானும் காணும் பொருளும் வெவ்வெறாகத் தோன்றுதல் கூடாது.

---

அகண்டாகாரமான சிவத்தின் தோற்மொன்றே நிகழதற்குரியதாலின்,

“காண்பானும் காட்டுவதும் காட்சியுமாய் நின்றஅந்த
வீண்பாவம் போய்அதுவாய் மேவுநாள் எந்நாளோ?” எந்நாட்கண்ணி நிற்கும் நிலை20)

என்றார்.

காண்பானும் காணும் பொருளுமாய்ப் பிரித்து நோக்குங் காலை காணும் பொருளை முன்னிலையாகச் சுட்டியுணர்தலால் அது சுட்டிறந்த ஞானத்திற்கு இடையூறாமாதலின்,

“முன்னிலை ஒழிந்திட அகண்டதா காரமாய்
மூதறிவு மேல்உதிப்ப
முன்பினொடு கீழ்மேல் நடுப்பக்கம் என்னாமல்
முற்றும்ஆ னந்த நிறைவே

என் நிலைமை யாய்நிற்க இயல்புகூர் அருள்வடிவம்
எந்நாளும் வாழிவாழி
இகபரம இரண்டினிலும் உயிரினும் உயிர்ஆகி
எங்கும்நிறை கின்ற பொருளே! (எங்கும் நிறைகின்ற பொருள்.11)

என்றார்.

“முன்நிலைச் சுட்டு ஒழி நெஞ்சே! நின் போதம் முளைக்கில்ஐயோ
பின்னலை ஜன்மம் பிறக்கும். கண்டாய் இந்தப் பேய்த்தனம்ஏன்?

என்றதுமது.

அது என்ற பரம் பொருளைக் குறித்து நினைத்தலும், அது என்ற சொல் சுட்டுணர்வினை எழுப்பி அதீத பாவனைக்கு இணையுமாதலின்,

"அதுவென் றுன்நு மதுவு மறநின்ற
முதிய ஞானிகண் மோனப் பொருளது
எதுவென் றெண்ணி யிறைஞ்சுவ னேழையேன்
மதியு ணின்றின்ப வாரி வாழங்குமோ? (பொன்னைமாதரை 29)

என்றார்.

எச்சொல்லாலும் இறைவனைச் சுட்டாது உணரும் நிலை என்ப்படும். அதையே மோனம் என்பார் தாயுமானவர்.

"மோனம் என்பது ஞானவரம்பு" என்ற அறநூல் உரையும் காணலாம். செயலுமற்றுப் பேச்சுமற்று அந்நிலையே சும்மா இருக்கின்ற நிலை எனப்படும்.

அத்துவித நிலை, மோன நிலை, சும்மா இருக்கும் நிலை என்பன ஒரு பொருளக் குறிக்கும்.

அதையே சுருங்கிய சொல்லால் பெரிய பொருளைத் தெரிவிக்கும் தாயுமானவர் அத்துவித நிலையைக் கூறுமிடத்து.

ஆகாரபுவனம் 22 ஆம் பாட்டின் இறுதியில் "அது வானாலதுவாவர் - அதுவே சொல்லும்" என்றார்.

"அதுவானால்" என்பதில் பொருள் அத்துவித பாவனை உடையரானால் என்பது.

"அதுவாவர் என்பதற்குச் சிவமாயவரென்பது கருத்து. மூன்றாவது "அது" சிவானுபவத்தைக் குறிக்கும்.

மேற்படி 23 ஆம் பாட்டில், "அது என்று சொன்னால் எது என்று ஒரு ஆசங்கையுண்டாகும்.

---

ஆதலியானல் அது என்ற கருத்தையும் அறவே ஒழித்து மதுவுண்ட வண்டுபோல் சனகனாதி மன்னர்களும், சுகர் முதலிய பெருமுனிவர்களும், பேரின்ப நுகர்ச்சியால் அசைவின்றி வாழந்தனர்” என்றார்.

தேனுண்ட வண்டு தேனின் நினைவு தவிர வேறொன்றும் உணராதிருக்கும்.

அதுபோலச் சிவானுபம் உடையவவர்களும் இருப்பர் என்றவாறு, அத்துவித ஞானமாகிய மோனத்தைத் தவிர வீட்டின்படைதற்கு வேறு வழியில்லை என்பது தாயுமானவரது திண்ணிய கருத்தாகும்.

முடிவிலா வீட்டின் வாழ்க்கை வேண்டினர்க்கு
உன் மோனமல்லால் வழிஉண்டோ?” (ஆரணம் 10)

“ஜெகங்கள் எங்கும் திரிந்துநல் மோனத்தை
உகந்த பேர்உனை ஒன்றுவர் ஐயனே!” (பொன்னை மாதரை.44)

““அத்துவிதம் பெரும்பேறு அத்துவிதக்
கட்டுக்குள் ஆவதென்றோ”

“மெய்ஞ்ஞானாத் தாணுவினோ டத்துவிதஞ்
சாருநாள் எந்நாளோ?

என்று காண்க.

அத்துவிதத்திற்குரிய உவமைகளை எந்நாட்கண்ணி “நிற்குநிலை” முதலிய இடங்களில் தாயுமானவர் தொகுத்துள்ளார்.

- பகலவன்முன் மதியினொளி அடங்கி நிற்பது போலவும்,
- வானுடங்கும் வளி போலவும், பட்டப்பகல் விளக்கெனவும்,

---

- உச்சிக் கதிரவனுக்கு எதிர்ப்பட்ட வடிகம் போலவும்,

இறைவன் திருவடி நிழலிலடங்குதலே அத்துவித நிலையாகும்.

"தான்", "தலை" என்ற இருசொற்கள் "தாடலை" என்று புணர்ந்து நின்றகாலை டகரமானது ஈரெழுத்தின் ஒற்றுமையை விளக்குதல் போல, இறைவன் தாளில் அடங்கிய உயிரின் அலை அடங்கிய ஞான்று, இருவரது கலப்பாகிய அத்துவித நிலை தகழும் என்பார் தாயுமானவர்.

"ஆடலையே காட்டி எனது ஆடல்ஒழித்து ஆண்டான்பொன்
தாள்தலைமேல் சூடித் தழைக்குநாள் எந்நாளோ?"

என்றது காண்க.

பேசா நிலையாகிய மௌனத்தை முடிந்த நிலையாகக் கடவுள் வைத்ததற்கு என்ன காரணம்?

குற்றமுள்ள நெஞ்சின் இவன் வஞ்சமுடையவன் ஆதலால் இவனோடு வாய் பேசுதல் தவறென்று இறைவன் கருதினமையே யாமென்று நயம்படப் பலவகைக் கண்ணி ஆறாம் பாட்டில் கூறியுள்ளார்.

தமக்கு இறைவன் மோன நிலையாகிய நோக்கத்தினைத் தந்தருளினார் என்பதை ஆனந்தக்களிப்பு ஏழாம் பாட்டில் பாடுகின்றார்.

"நலமேது மறியாத என்னைச் சுத்த
நாதாந்த மோனமா நாட்டந் தந்தே" (ஆனந்தக்களிப்பு.17)

மௌனம், மௌனமென்று வாயினால் பேசாமலும், கையை அசைக்காமலும் இருப்பதால் பயனில்லை.

---

இரவு பகலற்ற உணர்ச்சியோடு இறைவனை அறிவின்கண் நாடியிருத்தலே என்பார்.

வாக்கும் கைக்கு மௌனம் மௌனம் என்று
ஏய்க்கும் சொல்கொண்டு இராப்பகல் ற்றிடா
நாய்க்கும் இன்பம் உண்டோ? (பொன்னை மாதரை 42)

என்றார். இதனால் மௌனம் என்பது கட்டிருந்த முதல்வனை உணரும் ஞானநிட்டை என்பது தெளியப்படும்.

"கற்றதுங் கேட்டதுந் தானே ஏதுக்காக
    கடபட என்று உருட்டுதறகோ? கல்ஆல் ◌எம்மான்
குற்றம்அறக் கைகாட்டும் கரத்தைக் கண்டு
    குணம்குறி அற்று இன்ப நிஷ்டை கூடஅன்றோ. (நின்றநிலை 1)

"நேச நிர்விகற்ப நிட்டையல்லால் உன்அடிமைக்
காசை உண்டோ நீஅறியாது அன்றே பராபரமே" (பராபரக்கண்ணி.51)

ஞான நட்டையின் இயல்பினைத் "தேசோமயானதந்தம் 4 ஆம் பாட்டில் சுருக்கமாக -

- "ஆடாமல் நின்றுவிட்ட பம்பரம் போல மனமானவது விசை ஒடுங்கி விடவும்,
- அறியாமையயான இருள் நீங்கவும்,
- இருள் ஒளி இரண்டும் அல்லாத அருள் வெளியோடத்து விதமான என்னைக் கண்டு
- என்னுள்ளே இருக்கும் சாந்த வெளியாகிய பரம்பொருளைக் கூடி,
- அதீதமான இன்ப நிலையை நான் கூடினேனல்லனே"

என்று தமது ஞானப் பெருவிருப்பைக் குறித்தார்.

---

ஞான நிட்டையின் இயல்பினைச் சின்மயானந்த குரு 8 ஆம் பாடல்டில் தாயுமானவர் விரிவாகச் சொல்லியுள்ளார்.

- "கூடுதல்,பிரிதல், பற்றுவைத்தல், குவிதல், விரிதல் முதலிய செயற்கையின்றி,
- முக்குணமற்று,
- போக்குவரவும் கட்டுணர்வும் மனமாசும் இல்லாது
- மேல், கீழ், நடு என்னும் பகுதிப்படுத்து நினைத்தலும் உணர்த்தலும் இன்றி,
- ஐம்பூதம், விந்து, நாத முதலியவற்றைக் கடந்து - காண்போன், காட்சி என்பவற்றில் உணர்ச்சி, வாட்டம் யாதுமின்றி
- ஒன்று, இரண்டு என்ற விவகாரமற்று,
- மனம் ஒடுங்கி–
- முழுமுதல் பேரின்பக் கடலில் திளைத்துச் சிவமயமாய்,
- வேறு ஒன்றைத் தேடுதலும் இல்லாத இடமே "மேலாகிய நிலை" என்றதை நாம் காணலாம்.

அந்நிலையிலே இருப்பதே சும்மாவிருத்தல் என தாயுமானவர் கருதுவதால் அச்சொல்லினைப் பல இடங்களிலும் தாயுமானவர் வழங்குகின்றார்.

சும்மா இருப்பதற்கு நீ ஓர் உபாயம்அருளுதல் கூடாதா? என்று இறைவனை வினவுவார்.

"எம்மால் அறிவதுஅற எம்பெருமான் யாதம்இன்றிச்

சும்மா இருக்கஒரு சூத்திரம்தான் இல்லையோ" (இல்லையோ என்கண்ணி.3)

சும்மா இருக்கும் விருப்பம் தாயுமானவருக்கு அதிகம் உண்டு என்பது,

"சொல்லும் பொருளும் அற்றுச் சும்மா இருப்பதற்கே

அல்லும் பகலும்எனக்கு ஆசை பராபரமே" (பரா.5)

---

“சும்மா இருக்கச் சுகம் உதயம் ஆகுமே” (உடல்பொய்உறவு.52)

“சும்மா இருக்கச் சுகம்சுகம் என்று சுருதி எல்லாம்
அம்மா நிரந்தரம் சொல்லவும்” (பாயப்புலி 36)

“நானெனவும் நீஎனவும் இருதன்மை நாடாமல் நடுவே சும்மா
தான்அமரும் நிலைஅதுவே சத்தியம் சத்தியம்” (ஆசையெனும் 32)

அதனையே தூங்காமல் துங்குதல் என்றும் பகர்வார்.

“தூங்காமல் தூங்கிச் சுகப் பெருமா னின்னிறைவில்
நீங்காமல் நிற்கும் நிலைபெறவும் காண்பேனோ”(காண்பேனோ என் கண்ணி.10)

“தூங்கிவழித்து என்னபலன் தூங்காமல் தூங்கிநிற்கும்
பாங்குகண்டால் அன்றோ பலன்காண்பேன் பைங்கிளியோ”
(பைங்கிளிக்கண்ணி. 30)

சும்மா என்பதை (ஒரு சொல்) ஒரு மொழி என்று தாயுமானவர் சிறப்பிப்பது வழக்கம்.

“பாரீர். ஒருசொல் படியே அனுபவத்தைச்
சேரீர். அதுவே திறம்” (உடல்பொய்யுறவு.10)

“சொன்ன ஒரு சொல்லால் சுகமா இருமனமே!
இன்ன மயக்கம்உனக்கு ஏன்?” (உடல்பொய்யுறவு.70)

---

" ..............................................................................................சொன்ன ஒரு

சொல்லை மறவாமல் தோய்ந்தால், நெஞ் சே! உன்னால்

இல்லை பிறப்பதுஎனக் கே."                    (உடல்பொய்யுறவு.71)

நினைவொன்று 9 ஆம் பாட்டிலே  ஒரு மொழியின் பெருமையை விரிவாக உரைத்தார்.

ஒரு சொல்லே, பொருள் விரிக்குங் காலை, பல சொல்லாகிய மெய்நூற்கு இடம் கொடுக்கும், அந்த ஒரு மொழியே பாசத்தை நீக்கும், குருமொழிந்த ஒரு மொழியே  மலைபோன்ற எல்லையாக விளங்குகின்றது.

மற்ற மொழிகளைக் கைக்கொள்வதெல்லாம், கோடு வரையாமல் வட்டடுதல் போலும் என்ற விடத்து - ஒரு மொழி என்றது ஓங்காரத்தை எனவும், சும்மா இரு என்பதை யெனவும் திருவைத் தெழுத்தை யெனவும் கூறுப.

"ஓங்காரம் ஐந்து எழுத்தால்  புவனத்தை உண்டு பண்ணிப்." (பாயப்புலி.9)

என்றமையால் ஓங்காரமே ஐந்ழுத்தாதல் காணலாம்.

ஓங்காரத்தை ஒலித்தபோது நாதமும், எழுதியபோது விந்துவும் உகர அகர மகரங்களாகப் பிரித்தபோது மூவெழுத்தும் ஆதலால் அஃது ஐந்தெழுத்து எனல் தெளிவுபடும்.

"அஞ்சுஎழுத்தின் உண்மை அதுஆன அப்பொருளை

நெஞ்சுஅழுத்தி ஒன்றுஆகி நிற்குநாள் எந்நாளோ," (எந்.கண்ணி.நிலைபிரிந்தோர்.13)

---

சும்மா என்னும் சொல் "சும்ம" என்பதன் விரிவு. அச்சொல்லில் உ,ம்,அ என்ற மூன்றேழுத்திருத்தல் காணலாம்.

அவை ஓங்காரத்தின் உறுப்புகள், சகரமானது மகரத்தோடு சேர்ந்து அம்ச மந்திரமாகிய அசபையைக் குறிக்கும் என்பர்.

"சும்மாயிரு சொல் என்றலுமே அம்மா பொருளொன்றும் அறிந்திலனே" என்ற அருணகிரிநாதர் அருண்மொழி மிகவும் ஆர்வத்ததுடன் தாயுமானவர் பராட்டுகின்றார்.

"ஐயா! அருணகிரி அப்பா, உனனைப்போல

மெய் ஆக ஓர்சொல் விளம்பினர் யார்? (உடல்பொய்யுறவு.26)

சும்மாவிருந்து ஞானநிட்டை கூடுதற்குத் திருவருளையே நாடி நிற்றல் வேண்டும். திருவருட் கண்ணாலேயே எல்லாப் பொருளையும் பார்க்க வேண்டுமாதலின்,

"அருளால் எவையும்பார் என்றான் அத்தை

அறியாதே சுட்டிஎன் அறிவாலே பார்த்தேன்

இருள்ஆன பொருள்கண்டது அல்லால் கண்ட

என்னையும் கண்டிலன் என்னேடி தோழி

சங்கர சங்கர சம்பு." (ஆனந்தக்களிப்பு 13)

இதனால் நிலையற்ற உலகப் பொருள்களை ஆணவத்தால் காணுமிடத்துப் பொருள்களின் உண்மைத் தன்மை விளங்காமல் போவதல்லாமல் அந்தப் பொருள் வயமாய் நிற்கும் தன்னையும் அறிதற்கு இடமில்லை என்று உரைத்தவாறாயிற்று.

ஞானம் உதித்தற் பொருட்டு ஆசையின்மை இயற்கையாக அமைந்தால், அது தானே கனிந்த கனிபோலும் என்றும், பிராணனை யோகத்தால் வசப்படுத்தி மனவொடுக்கங் கொண்டு பற்றுதல்--

---

கனிவிக்க வந்த கனி என்றும் சுகவாரி 6 ஆம் பாடலில் தாயுமானவர் தெரிவித்துள்ளார்.

ஞானமில்லாமல் முத்தி கூடுதல் முடியாது என்பது தாயுமானவரின் கருத்தாகும்.

சின்மயானந்த குரு 11 ஆம் பாட்டில்,

- "அன்பு நெறியில் நிலைபெற்று நின்றாலும் - ஒன்பது கண்டங்களையும் வலம் வந்தாலும்-
- கடலில் மூழ்கினாலும்,
- புனித நதிகளில் குளித்தாலும்,
- பசி தாகங்களைப் பொருட்படுத்தாது - தீ நடுவே நின்றும் உதிர்ந்து சருகு, நீர், காற்று என்பவற்றை மிகுந்த பசி வந்தபோது உண்டும், மௌனத்திலிருந்தாலும் -
- உயர்ந்த மலைக் குகைளில் புகுந்து பத்து நாடியையும் சுத்தி செய்து மூலாதாரத்தில் உள்ள அனலையும் மூச்சுக் காற்றினால் மேலெழுப்பிச் சந்திர மண்டலத்து அடைத்துச் சிறந்த அமுதத்தை உண்டும் சிறிது காலம் நிற்கும் உடம்பினைப் பல ஊழிகள் நிலைபெறும்படி சித்தி செய்தாலும்

ஞானம் பெறாவிடத்து உயர்கதியடைதல் கூடுமோ? என்றார்.

ஞான நெறியானது, கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்று நான்கு வகைப்படும் என்பது

"கேட்டல்முதல் நான்காலே கேடுஇலா நாற்பதமும்

வாட்டம்அறஎனக்கு வாய்க்குநாள் எந்நாளோ. (எந்.கண்ணி நிலைபிரிந்தோர்.5)

ஞானத்தை முற்றிலும் கைவரப் பெறாவிடின் சரியை, கிரியை, யோகமென்று மூன்றிற்கும் உரிய பதமுத்திகளுள் ஒன்றாவது தமக்குக் கிடைக்கப் பெறவேண்டும் என்பார் தாயுமானவர்.

"ஞானநெறி தானே நழுவிடினும் முப்பதத்துள்

ஆனமுக்தி நல்கும்என அன்புறுவது எந்நாளோ." எந்.கண்ணி நிலைபிரிந்தோர்.2)

இதனுள் ஞான நிட்டை கைவராவிடினும் ஞான நூல்களைக் கேட்டல், சிந்தித்தல்,தெளிதல் என்னும் மூன்றினையும் பற்றினவர்க்குரிய, சுத்த தத்துவ புவனப் பதவிகளையே, "முப்பதத்தோடான முத்தி" என்று தாயுமானவர் குறிப்பிட்டுள்ளார் என்றும் சிலர் கூறுவார்கள்.

குருலிங்க சங்கமம் என்ற மூன்றினுள் இலிங்கத்தின் பெருமை சிவபெருமானது வடிவ வழிபாடு கூறுமிடத்து விளக்கப்பட்டது. அந்த மூன்றையும் ஒர சிறு கண்ணியில் வழுத்தினார்.

"மூர்த்தி எல்லாம் வாழி எங்கள் மோன குருவாழி அருள்

வார்த்தை என்றும் வாழி அன்பர் வாழி பராபரமே" (பரா.22)

குருவின் பெருமையைத் தமது குருவாகிய மௌன குருவினைப் பாடிய மௌனகுரு வணக்கில், செவ்விதின் அடிகள் உரைத்தனர்.

"மௌன குரு வணக்கம் முதல் பாட்டிலே. மௌனகுருவே! என்னையொரு அறிவு மதங்கொண்டு யானையாக வளர்த்தனை. எவ்வாறெனில்....

- ஆசையாகிய விலங்கினைப் பொடிபடும்படி உதறி ஆங்காரமாகிய முளையைப் பிடுங்கியெறிந்து
- இரண்டமை விழைதல் என்னும் மதங்கொண்டு ஆறு சமயமும், ஆறுபோலத் துதிக்கை பொழி நீராகவும் அமைய,
- பாசமாகிய இருளைத் தன்னிழல் என்று கருதிச் சினம் ஆரவாரம் செய்து,
- மேலே பார்த்த பெருமித நோக்குடன், பரந்து செல்லும் மனத்தைப் பெரியதோர் கவளமாக நிரம்ப உண்டு,
- முகத்தில் போர்த்த துணி போன்ற மாயையினைக் கிழித்து எறிந்து,
- அறிவாகிய ஒளியோடு கூடிய உனது செவ்விய கையில் பிடித்த சின்முத்திரையாகிய தோட்டி வசமாய் அடக்கிப் பேரறிவானந்தப் பெரு வெள்ளத்தில் திளைத்தது

---

- நின் திருவருளின் இறைவாகிய நன்னய வாசத்தில் உலவும்படி செய்தனை."

## மௌனகுரு 3 ஆம் பாட்டில் மௌன குருவின் உயர்நிலை தெரிவிப்பார்.

- "கண்ணாற் பார்த்தபோது காட்டில் உள்ள புலியானது பசுவோடு இணக்கமாய் உடன்திரியும்.
- மதங்கொண்ட யானையானது நீ கையினால் குறிப்புக் காட்டியவுடன் நெருப்பிலிடுதற்குப் பெரிய கட்டைகளை மிகுதியும் ஏந்திவரும்.
- காமதேனுவாகிய விண்ணவர் பசு உன் பொன்னடியைத் தொழுது, உணவு ஆய்ததமாயிருக்கிகறது என்று உனக்குத் தெரிவிக்கும்.
- உலகத்தில் உள்ள புரவலரும் பாவலரும் தவவேந்தன் என்ற உனை வழுத்தி "வெற்றியோடு காக்க" என வாழ்த்துவர்.
- அறிவும் அருளும் நிறைந்த உனது திருமுகத்தைப் பார்த்த அளவிலே நவநாத சித்தர்களும் உன் நட்பினை விரும்பவர்.
- சுகர், வாமதேவர் முதலிய ஞானிகளும் உன்னை மதித்துப் புகழ்வர்.
- விண்ணவரும் வணங்கித் தொழுதற்கரிய நின் பெருமை சொல்ல எளிதாகுமோ? என்றனர்.

## மௌனகுரு 8 ஆம் பாட்டில்

- "சருகுகளையும் நீரையும் உணவாகக் கொண்டு தவமியற்றுவார் ஒரு கோடிக்கண்கான கூட்டத்தினரும்,
- நிலவொளியை உணவாகக் கொள்ளும் செம்போத்துக்கள் போல மதிமண்டல அமுதினால் அழியாத் தன்மையடைந்த பலகோடி யோகியர்களும்,
- இருவினையொப்புற்றுக் காலம் கடந்த ஒருமைப் பாடுடைய பேசாத பேரின்ப நிட்டையுடையார் எண்ணிறந்தோரும்,
- இரசகுளிகை மருந்து முதலியவற்றால் எண்வகைச் சித்தி எய்தினோர் பல்லோரும் சூழ்ந்திருக்க
- அவர்கள் நடுவே செவ்விய திறமிக்க மணிகளால் இழைத்த ஏற்றிருக்கையில் கொலுவீற்றிருக்கும் நின்னைக் கையால் கும்பிட்டுப் பன்முறை வீழ்ந்து பணிந்து என் மனக்குறை எல்லாம் தீரும் வண்ணம்

---

மணமிக்க மலா தூவி உன் திருவடிகளைப் போற்றும் பொருட்டு நீ என்னை வரவெற்ழைப்பது எக்காலம்? " என்றதையும்

"........................................................................உன்

காட்சியில் இருந்து கொண்டு

வல்லாள ராய்இயம நியமாதி மேற்கொண்ட

மாதவர்க்கு ஏவல் செய்து

மனதின் படிக்கு எலாம் சித்திபெற லாம். ஞானம்

வாய்க்கும். ஒரு மனுஎனக்கு இங்கு

இல்லாமை ஒன்றினையும் இல்லாமை ஆக்கவே

இப்பபோது இரங்கு கண்டாய். (எங்கும் நிறைகின்றபொருள்.8)

அன்பர்க்கு பணி செய்வதையே தாயுமானவர் மிகவும் ஆர்வத்துடன் விரும்புகின்றார்.

"அன்பர்பணி செய்ய என்ன ஆளாக்கிவிட்டு விட்டால்

இன்பநிலை தாநேவந்து எய்தும் பராபரமே. (பரா.155)

ஞானிகள் உலகைப் பார்க்க மாட்டார்கள். பார்த்தாலும் எல்லாம் சிவமாகக் கண்டிருப்பார் என்கிறார் தாயுமானவர்.

கடவுளைக் கண்டவர்களைக் கண்டால் நற்கதி சேரலாம் என்பார் தாயுமானவர்.

"அண்ட பகிரண்டுமும் அறியாத நின் வடிவைக்

கண்டவரைக் கண்டால் கதியாம் பராபரரமே" (பரா.323)

ஞானிகள், பாலர் - பேய் பிடித்தவர் - பித்தா - என்பவரது தன்மையை உடையராய் உலகத்துக்குத் தோன்றுவர்.

---

உலகத்தார் போல உண்டு உடுத்து அணிகள் அணிந்து உலாவித் திரிதலையும் தொண்டர்கள் ஒரு விளையாட்டாகக் கொண்டிருப்பார்கள்.

ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாகக் கடவுளை நாடுவதும் அடியவர் செய்கை என்பதைப் பராபரக்கண்ணியின. 141 ஆம் பாட்டில் தாயுமானவர் பாடுகிறார்.

இரவு பகலற்ற இறைவனைக் கண்ட ஞானிகள் வழி எங்கும் ஒரே தன்மையுடையது.

திருவருளை உயிராகப் பெற்றவர்கட்கு ஞாயிறு எங்கே உதித்தால் என்ன? என்ற கருத்தை 145 ஆம் பாட்டிலும் விளக்கிக் காட்டினர். சிவமாந் தன் எய்திய ஞானிகட்டுகத் தாம் மீளா அடிமை என்பார்.

“சித்தம் தெளிந்து சிவம் ஆனோர் எல்லோர்க்கும்

கொத்தடிமை ஆன குடிநான் பராபரமே.”

# வேதாத்திரிய அத்வைதம்

அங்குஇங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்,
ஆனந்த பூர்த்திஆகி,
அருளொடு நிறைந்தது எது? தன்அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம்

தங்கும் படிக்கு இச்சை வைத்து, உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது ? மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது? சமயகோ டிகள் எலாம்
தம்தெய்வம் எம்தெய்வம் என்று

எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கு இடவும் நின்றது எது?
எங்கணும் பெருவழக்காய்,

---

யாதினும் வல் ஒரு சித்தாகி இன்பமாய்
    என்றைக்கும் உள்ளது எது? மேல்

கங்குல்பகல் அறநின்ற எல்லை உளது எது? அது
    கருத்திற்கு இசைந்தது அதுவே.
கண்டன எலாம் மோன உருவெளியது ஆகவும்
    கருதிஅஞ் சலிசெய்குவாம் (திருவருள் 1)



இந்தப் பாடலை தமது சிறு வயதில் பஜனைகளில் பாடக்கேட்ட வேதாத்திரி மகரிசி சொல்கிறார்,

- "அந்தப் பாடல் எனது உள்ளம் முழுவதும் லயித்து விடும். அதன் மூலம் உணர்ந்த முடிவே, கடவுள் அரூபம் எனும் தெளிவு. இந்தப் பாடலே எனது உள்ளுணர்வைத் தூண்டி தத்துவத்திலே தெளிவை அளித்து இறைநிலையை யான் உணர உதவியது. (எனது வாழ்க்கை விளக்கம் - 21)
- இந்தப் பாடலின் தாக்கமே வேதாத்திரி மகரிசியை "அறிவேதான் தெய்மென்றார் தாயுமானார்" (ஞானக்களஞ்சியம் பா.7) என்ற பாடலைத் தொடங்கச் செய்துள்ளன.

நீங்கள் வெளியூருக்கு செல்கிறீர்கள்; அங்கு பகல் உணவு கிடைக்காது என்பதால், உணவுப் பெட்டியில் உணவை எடுத்துச் செல்கிறீர்கள்.

இப்போது, நீங்கள் வேறு, உணவு வேறு. பிறகு பகல், ஒரு மணி அளவில் அந்த உணவை உண்ணுகிறீர்கள். இப்போது அந்த உணவு பெட்டியில் இல்லை; உங்களுக்குள் சென்று விட்டது. உணவு நம் உடலில் சத்தாக மாறிய நிலை (அத்துவைதம்)

இவ்வளவு நேரம் அந்த உணவும் நீங்களும் தனித்தனியே இருந்தாலும், இப்போது ஒன்றாகி விட்டீர்கள். இப்போது உங்களை

---

நினைத்துப் பாருங்கள். நீங்கள் யார்? இதுவரையில் நீங்கள் எடுத்துக் கொண்டுள்ள மொத்த உணவின் சாரம்தானே?

அணு நிலையில் உடலும் ஒன்றே. சிவம் என்ற இருப்பு நிலையிலிருந்து சக்தியெனும் விண் மலர்ந்தது.

சில விண் துகள்கள் உடலாயின. சில விண் துகள்கள் உணவாயின. இதனால் உடலும், உணவும் தோன்றிய மூலப்பொருள் அணுவே. இங்கு அத்வைதம் துவைதமாயிற்று.

1 மணிக்கு, நீங்கள் வேறு, அந்த உணவு வேறு. 5 மணிக்கு நீங்களும் அந்த உணவும் இரண்டறக் கலந்து ஒன்றாகி விட்டீர்கள். 1 மணியிலிருந்து 5 மணி வரை நடைபெற்ற வேலைக்கிரமம் இருக்கிறதே அதுதான் விசிஷ்டாத்வைதம்.




மனிதன் அத்வைதம் என்பதையும், த்வைதம் என்பதையும் உணர்ந்து கொள்கிறான்.

த்வைதம் என்ற நிலையிலிருந்து, உண்மையைப் புரிந்து கொண்டு, இயற்கையின் ஒழுங்காற்றலைப் புரிந்து கொண்டு, தன்னை உயர்த்திக் கொண்டு அத்வைதம் என்ற நிலைக்குச் சென்றடைகிறான்.

இந்த செயல் ஒழுங்குதான் விசிஷ்டாத்வைதம். அதற்குத் தனித் தன்மையுள்ள அத்வைதம் என்பதும் பொருந்தும்.

இவ்வாறான உண்மைகளைத் தெளிவாக உணர்ந்து கொள்ளாமல், 'த்வைதம்" ஒன்றுதான் கடவுளை அடைய வழி' என்றும், 'அத்வைதம்" ஒன்றுதான் கடவுளை அடைய வழி' என்றும், சண்டையிட்டுக் கொண்டு மக்களில் பலர் தங்களை குழப்பத்தில் ஆழ்த்திக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு பொருளுக்கும், நிகழ்ச்சிக்கும் மூன்று அடிப்படைக் கொள்கைகள் உண்டு.

--------------------------------------------------------------------------------------------------------------------------------

‘‘எல்லாம் ஒன்று’’ என்பது அத்வைதம். ஒவ்வொன்றும் அதனதன் தனித்தன்மைக்கும் குணாதிசயங்களுக்கும் ஏற்ப ஒன்றுக்கொன்று ‘‘மாறுபடுகிறது’’ என்பது த்வைதம்.

எல்லாமே பகுத்துக் கொண்டே வரப்படும்பொழுது அணுவாகிப் பின்னர் பரமாகிறது என்பது விசிஷ்டாத்வைதம்.

அத்வைதம், துவைதம் :
--------------------------------------

“கற்கண்டு என்ற ஒரு வார்த்தை சொன்னால்
கரும்பு ரசப்பக்குவத்தின் சரித்திரமாகும்
கற்கண்டைக் கரும்பு ரசம் என்றால் அஃது
கருத்துக்கு அத்துவித தத்துவம்போல்
கற்கண்டு கரும்புரசம் வேறு வேராய்க்
காட்டுவது துவித நிலை விளக்கம் ஒக்கும்
கற்கண்டு கரும்புரசம் இரண்டும் போலாம்
கடவுளும் மற்றனைத்துருவும் கருத்துணர்ந்தால்”.

“வேதாந்தி சித்தாந்தியானாலன்றி
வீடுபேறு கிட்டாது வெற்றுப்பேச்சால்
வாதாடி வாழ்நாளைக் கழிப்ப தல்லால்
வந்துலகில் பிறந்த பயன் வழுக்கிப்போகும்”.

“வேதத்தை யான்படித்த தில்லை ஆனால்
வேதத்தின் உட்பொருளாய் என்னைக்கண்டேன்
வாதத்தில் யான் கலந்து கொண்டதில்லை
வாதிப்போர் அனைவருக்கும் பொருளாய் உள்ளேன்;
பேதித்த அண்டங்கள் உயிர்கட்கெல்லாம்
பிறப்பிடமாய்க் கருப்பொருளாய் என்னைக் கண்டேன்;

---

சோதிப்போர் புலனறிவால் என்னைக் காணார்
சுயநிலையை அகத்துணர அவர் நான் ஒன்றே".- வேதாத்திரி மகரிஷி

நமக்கு முன் உணவு (துவைதம்)
வயிற்றுக்குள் உணவு (விசிட்டாத்துவைதம்)
உணவு நம் உடலில் சத்தாக மாறிய நிலை (அத்துவைதம்).

சுவாமி விவேகானந்தர் இந்த மூன்றையும் இணைத்து அருமையான யோக விளக்கத்தை அருளினார்.

ஆன்மிகவாதியின் தொடக்க நிலை துவைதம். இடைப்பட்ட நிலை விசிஷ்டாத்வைதம். முடிந்த முழுமையான நிலை அத்வைதம் என்றார்.

ஆதியும், அந்தமுமில்லாத, துவக்கமும், முடிவும் இல்லாதவர் பரம்பொருள் என்ற கோட்பாட்டின்படி பார்க்கும் பொழுது,தோன்றுகிற எல்லாம் எங்கிருந்து தோன்றுகிறதோ அங்கே ஒடுங்குகிறது. அப்படியென்றால் முடிவு அத்வைதமாகும் பட்சத்தில், துவக்கமும் அதாகத்தானே இருக்க முடியும்.

இக்கருத்தைச் சொல்லாமல் சொல்லி மூன்று பிரிவினரையும் இணைத்த பெருமை சுவாமி விவேகானந்தரையே சாரும்.



வேதம், வேதாந்தம், உபநிடதங்கள் இவற்றால் மெய்யறிவு புலப்படும். ஆனால் மெய்யுணர்வு என்பது அதையும் கடந்து விளங்குவது. அதுவே ஆன அந்தம் - ஆனந்தம்.

இருளில் தட்டுத் தடுமாறி போய்க் கொண்டிருப்பவனுக்கு மெய்யறிவு என்பது விளக்கைப் போன்றது. அதன் துணையோடு அவன் மெய்யுணர்வை அடைய வேண்டும்.

எனவே முக்தி அடைய முயற்சி செய்கிற ஜீவாத்மா கடைபிடிக்கும் வழிமுறையே வேதாந்தம்.

---

அப்படி பரமாத்மாவை நோக்கி பயணப்படும் போது அந்த ஜீவன் மூன்று நிலைகளைக் கடக்க வேண்டியதிருக்கிறது. அதுவே துவைதம், சிஷ்டாத்வைதம், அத்வைதம் என்பவை.

துவைதம் என்பது பசு, பதி, பாசம் அல்லது ஜீவன், மாயை, பரம் என்கிற போக்கில் பன்மையைக் குறிப்பது.

பொதுவாக ஒன்றல்ல இரண்டு என்பார்கள். விசிஷ்டாத்வைதம் என்பது விசேஷமான அத்வைதம் என்பதே.

அதாவது ஜீவனும், மாயையாகிய ஜகத்தும் பரமாத்மாவுக்கு சரீரமாக இருக்கின்றன.

சரீரத்தையும் அதை உடையவனையும் இரண்டாகப் பிரிக்க முடியாது. எனவே அவன் இரண்டல்லாத தனிப் பொருள்.

ஆயினும் அவன் சரீரத்தையும் அதிலுள்ள அங்கங்களையும் பாகுபடுத்தலாம். இதையே பேத, அபேதம் என்பார்கள்.

அடுத்து அத்வைதம் அதாவது இரண்டற்றது. எல்லாம் ஒன்றுதான். எல்லாம் பரமே. அதற்கு வேறானது எதுவுமில்லை.

மாயையின் லீலைகளான தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம் யாவும் பரமாத்மாவை எந்த வகையிலும் விகாரப்படுத்தாது.

ஏனெனில் அவர் பூரணமானவர். பரமாத்மா பரிபூரணமானவர். எல்லாம் பரசிவமயம். என்பது முடிவு.

இந்த துவைதம், விசிஷ்டாத்வைதம், அத்வைதம் என்கிற மூன்று நிலைகளை உபநிடதங்கள் அவஸ்தாத்ரயம் என்கிற நிலையில் விளக்குகிறது.

அதாவது அவஸ்தைகள். அவைகள் ஜாக்கிரதம், ஸ்வப்னம், சுஷுப்தி( நனவு, கனவு, கனவற்ற உறக்கம்) என்கிற நிலைகள். ஜீவபோதம் படைத்துள்ள அனைவருக்கும் இவை பொதுவானவைகள் மட்டுமல்ல நாள்தோறும் நிகழ்பவை.

---

அதாவது நனவு என்கிற விழிப்பு நிலையில் ஜீவனாகிய நான் வேறு, ஜகத்(வையகம்) வேறு, பரம் வேறு. ஈண்டு முப்பொருளும் உண்மையே என்கிற அவஸ்தை. இது துவைதம்.

சாதனைகள் புரிவதற்கும், முன்னேற்றம் அடைவதற்கும் இந்த நனவு நிலையாகிய துவைத நிலையே முற்றிலும் பயன்படுகிறது.

கனவு நிலை என்கிற ஸ்வப்ன அவஸ்த்தையில் நான் காணுகின்ற உலகக் காட்சிகள், தெய்வக் காட்சிகள் யாவும் என் மனதின் கற்பனைகளே. என் மனோ விகாரங்கள் புறப் பொருளாகப் பொருள்படுத்தப்படுகின்றன.

ஒரு பொருளாகிய மனது கனவில் பல பொருளாகத் தோன்றுகிறது என்கிற நிலை. இதையே பேதாபேதம்(பேத + அபேதம்) என்பார்கள். இதுவே விசிஷ்டாத்வைதம்.

அடுத்தது கனவற்ற உறக்கம் என்கிற சுஷுப்தி என்ற நிலை. இதிலே, நான் இல்லை. காணப்படுகின்ற புறப் பொருள்கள் எதுவும் இல்லை. வெறும் பிரக்ஞை(உணர்வு) அல்லது பிரக்ஞானம் மட்டும் தன்மயமாக இருக்கிறது. இது இரண்டற்றது. அத்வைத நிலை.

ஆக இந்த மூன்று நிலைகளாலேயே மனிதன் மேன்மை அடைந்து வருகிறான். எனவே இதில் ஒன்றை உயர்த்தியோ மற்றதைத் தாழ்த்தியோ பேசுவதோ, கருதுவதோ ஏற்புடைது அல்ல.

சாதனை புரிபவர்களுக்கு இந்த மூன்று நிலைகளும் உதவுகின்றன. மனதின் இந்த மூன்று நிலைகளின் சிறப்பை உணர்ந்தவனே நல்ல சாதகன் ஆகிறான்.

மெய்ப்பொருள் ஞானம் பெற்ற ஞானிகள் எல்லாம் இந்த மூன்று நிலைகளிலும் திளைத்து மேன்மையடைந்திருக்கிறார்கள்.

"ஏகம் ஸத் விப்ரா பஹூதா வதந்தி " - ரிக் வேதம்.
மெய்ப்பொருள் ஒன்றுதான். அதுவே பல பெயர்களால் வழங்கப்பட்டு வருகிறது.

தாயுமானவர் தந்த அத்வை நிலையை உணர்ந்து, அடைந்து இறையுணர்வு பெறுவோமாக.